Registered at the G. P. O. as a Newspaper
Adv

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# ஈழநாடு

EELA NADU

போன்: 369 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 26 ஆம் நாள் துல்கஃதா 22 (8-5-61) திங்கட்கிழமை இதழ் 71

# தடுப்புகாவலில் 34 பேர்

## தகவல் அதிகாரியின் அறிக்கைகள்

### தோட்ட அதிபர்களுக்கு பிரதமரின் புதிய உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

பொதுஜனப் பாதுகாப்பு சம்பந்தமாகவும் அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமாகவும் தகவல் அதிகாரியால் வெளியிடப்படும் அறிவித்தல்கள், சுவரொட்டிகள், வெளியீடுகள் யாவும் தேயிலை, ரப்பர், தெங்கு தோட்டங்களில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென்று ஒவ்வொரு தோட்ட சுப்ரின்டென்டட்டுக்கும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு வெளியிட்ட விசேஷ 'கஸட்' மூலம் உத்தரவிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழுள்ள அதிகாரத்தின்படி பிரதமர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

தகவல் அதிகாரியால் வெளியிடப்படும் அறிவித்தல், விளம்பரம், வெளியீடு முதலியவற்றை அல்லது அவைகளில் சொல்லப்பட்டிருப்பவற்றை தோட்டத்திலுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் தோட்ட சுப்ரின்டென்டன்ட் வாயால் அல்லது எழுத்து மூலம் விளங்கிக்கூறுவதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் 'கஸட்' அறிக்கை மூலம் விடுத்த அந்த உத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

---

### ஒரு வருடத்தில் 4000 புற்றுநோயாளர்

கொழும்பு, ஞாயிறு

சுகாதார சேவையாளரின் மதிப்பீட்டின்படி ஒவ்வொரு வருட முடிவிலும் சுமார் 4000 பேருக்கு புதிதாக புற்றுநோய் பரவிவருவதாகத் தெரிய வருகிறது.

இவர்களில் 1000 பேர் கொழும்பிலுள்ளவர்கள்.

50 வீத புற்றுநோயாளருக்கு வாயிலேயே புற்றுநோய் இருப்பதாகவும் இதன் காரணம் வெற்றிலை அதிகமாக உபயோகிப்பது தானென்றும் அறியப்படுகிறது.

16,000 பேருக்கு இந்நோய் இருப்பதாகத் தெரிகிறதென்றும் இன்றும் நூற்றுக்கணக்கான நோயாளர் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்கின்றார்களென்றும் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஷோம்பேயின் பெல்ஜிய ஆலோசகர்கள்

நாடுகடத்தப்பட்டனர்

லியப்போல்ட்வில்லி, மே 7

கொக்குயில்ஹத்வில் என்ற இடத்தில் கடாங்கா ஜனாதிபதி ஷோம்பேயுடன் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட கடாங்காவின் பெல்ஜிய ஆலோசகர்கள் பெல்ஜியத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டனர்.

னகாங்கோ ஜனாதிபதி கஸவுபுவின் உத்தரவின் மீது இவர்கள் பெல்ஜியத்துக்கு அனுப்பப்பட வேண்டுமென்று காங்கோவிலுள்ள ஐ. நா. அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்குயில்ஹத்வில்லியில் காங்கோவின் எதிர்காலம் பற்றி ஆராய்வதற்காக காங்கோத் தலைவர்களின் மகாநாடு கூட்டப்பட்டபொழுது அந்த மகாநாட்டுக்குவந்த ஷோம்பே தனக்கு உதவியாக தமது பெல்ஜிய ஆலோசகர்களை அழைத்துவந்திருந்தார்.

### தாகூர்

புதுடில்லி, மே 7

மகரிஷி ரவீந்திரநாத் தாகூரின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் ரஷ்யா, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, பிரான்ஸ், பாகிஸ்தான் ஆகியவை உட்பட பல உலகநாடுகளில் ஆரம்பமாகியிருப்பதாய்ச் செய்திகள் வந்துள்ளன.

நாளை புதுடில்லி பாராளுமன்ற மண்டபத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் எம். பிக்களைக் கொண்ட ஒரு கூட்டம் தாகூர் கொண்டாட்டத்தில் கலந்துகொள்கிறது.

தாகூர் நூற்றாண்டு விழா லண்டன் மகாத்மா காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. 2 நாள் மகாநாடு இங்கு நடைபெறும்.

நெதர்லாந்தில் டச்சு தாகூர் சங்கம் 2 நாள் கொண்டாட்டங்களை ஆரப்பித்தது. டாக்டர் ராஜேந்திர பிரஸாத், பிரதமர் நேரு ஆகியோர் இக்கொண்டாட்டத்துக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

செக்கோஸ்லோவேகியாவில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் பல மந்திரிகளும், எம். பிக்களும், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 5 வருட கடுங்காவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

செல்லையா கதிரவேலு என்பவர் கதிரிப்பாயைச் சேர்ந்த, 52 வயதான வல்லிபுரம் சின்னத்துரை என்பவரைக் கடந்த 1959-ம் ஆண்டு அக்டோபர் 31-ந் தேதி அச்சுவேலியில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றதாகக் கூறப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. என். சின்னத்தம்பி எதிரிக்கு 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

52 வயதான வல்லிபுரம் சின்னத்துரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"திருக்கோணமலையில் படகொன்றில் நான் வேலை செய்து வருகிறேன். சம்பவதினத்தன்று நான் கதிரிப்பாயில் இருந்தேன். எதிரி எனது உறவினர். சம்பவ சமயத்தில் நான் எதிரியுடன் பேசுவது கிடையாது. குறிக்கப்பட்ட ஒரு பெண்ணை அவர் விவாகம் செய்வதை நான் ஆட்சேபித்தேன் இவ்விஷயமாக அவர் என்னுடன் விரோதம் கொண்டிருந்தார்."

---

### 2வது ஜெனரலும் கைதானர்

அல்ஜீரியப் புரட்சியின் விளைவு

பாரிஸ், மே 7

அல்ஜீரியாவில் சமீபத்தில் தோல்வியில் முடிவடைந்த புரட்சிக்குத் தலைமைவகித்த நான்கு ஜெனரல்களில் இரண்டாவது ஜெனரலான அன்டிறிக் செல்லர் கைதுசெய்யப்பட்டு பாரிஸில் சிறை வைக்கப்பட்டுள்ளார். 63 வயதான ஜெனரல் ஏற்கனவே சிறை வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சலானுடன் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள்மீது விரைவில் விசாரணை நடைபெறவிருக்கிறது.

## அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை

**கொழும்பு, மே 7**

**யாழ்ப்பாணத்தில் மேலும் 34 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.**

## சமசமாஜ எம். பி. க்கள் யாழ்ப்பாண விஜயம்

**யாழ்ப்பாணம், மே 8**

**சமசமாஜக் கட்சி எம். பி. க்களான திரு. எட்மன் சமரக்கொடி, மிரில் பர்னான்டோ இவர்களும், கொழும்பு எம். பி.யான திரு. மல்லவராச்சியும் நேற்று யாழ்ப்பாணம் வந்து பல இடங்களுக்கும் சென்று பார்த்துவிட்டு இன்று மத்தியானம் கொழும்பு திரும்புகிறார்கள்.**

### சாரணர் நிர்வாக மகாநாடு

கொழும்பு, ஞாயிறு

பிலிப்பைன்ஸில் நடைபெறவிருக்கும் சாரணர் இயக்கம் நிர்வாகம் பற்றிய தூர கிழக்கு பயிற்சி மகாநாட்டில் இலங்கையும் கலந்து கொள்ளும். இலங்கைப் பிரதிநிதியாக திரு. ஐ. கே. பி. சந்திரசேன மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இன்று பிலிப்பையன்ஸ் பிரயாணமானர்.

---

### அமெரிக்க உப ஜனாதிபதி

ஆசியநாடுகளுக்கு விஜயம்

வாஷிங்டன், மே 7

அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஜோன்சன் விரைவில் ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடி அறிவித்துள்ளார்.

தென் வியட்நாம், மணிலா, தைட்பே, பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களுக்கு திரு. ஜோன்சன் விஜயம் செய்வார்.

---

### பெரியாஸ்பத்திரி காரியதரிசி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக் காரியதரிசியாக திரு. கே. இரத்தினசபாபதி இம் மாதம் 2ந்தேதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக மேற்படி ஆஸ்பத்திரியில் காரியதரிசியாகக் கடமைபார்த்த திரு. எஸ். ஆர். செல்லையா மகரகம ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### அங்கோலா நிலைமை

தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை

நியுயோர்க், மே 7

போர்ச்சுக்கலின் காலனி நாடான அங்கோலாவில் சுதந்திரம்கோரி கிளர்ச்சி செய்யும் தேசியவாதிகளை போர்ச்சுக்கல் அரசாங்கம் மிருகத்தனமாக நடத்துவதை கண்டித்து சுயேச்சைத் தொழிலாளரின் சர்வதேச சங்கம் ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர் ஷீல்டுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளது. அங்கோலா சம்பவம் உலக சமாதானத்துக்குப்பேராபத்தாக முடியுமென்று அக்கடிதத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் அங்கோலாவில் கிளர்ச்சியை அடக்க மேலும் 34,000 துருப்புக்கள் போர்ச்சுக்கல்லிலிருந்து அங்கோலாவுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

---

### ஷோம்பே மீது தேசத்துரோக குற்றச்சாட்டு

பொம்பகோ அறிவிப்பு

லண்டன், மே 7

கடங்காஜனாதிபதிஷோம்பே மீது தேசத்துரோக குற்றஞ்சாட்டி விசாரணை நடைபெறும் என காங்கோ வெளிநாட்டு மந்திரி ஜஸ்டின் பொம்பகோ கூறினர். ஷோம்பே கள்ள நோட்டு அடித்து உபயோகித்ததுடன், காங்கோவின் பல சொத்துக்களையும் களவாடியிருக்கிறார் என பொம்பகோ கூறினர்.

### மணிவாக்கு

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமையே கல்வியாகும்.
—ஹிப்பன்


# ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
சித்திரை மீ 26 உ (8-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## "பெண் விடுதலை"

"நமது பெண்களை விடுதலை செய்வதற்கு, வரதட்சணை தடை மசோதா அவசியம்" என்று பிரதமர் நேருஜி, இந்தியாவின் இரு சட்ட மன்றங்களான லோக் சபையும், ராஜ்ய சபையும் சேர்ந்த ஒரு கூட்டத்தில் கூறி அம்மசோதாவைப் பலமாக ஆதரித்தார். இந்த மசோதாவையும், அதன்மீது அங்கு நடந்துள்ள விவாதங்களையும் இலங்கையிலுள்ள பொதுமக்களும் சிறப்பாகப் பெண்களும் கூர்ந்து கவனிக்கக் காரணமுண்டு. ஏனெனில் வரதட்சணை அல்லது சீதனம் எனப்படும் வழக்கம் இந்தியாவைப்போல் இங்கும் இருந்துவருகின்றது.

வரதட்சணைக்கும் இலங்கையிலுள்ள சீதன முறைக்கும் ஒரு முக்கிய வேற்றுமை என்னவெனில், வரதட்சணை என்பது மாப்பிள்ளையின் கையிலேயே பணத்தை ரொக்கமாக விவாகத்துக்குமுன் கொடுக்க வேண்டியதாகும். அப்பணத்தில் பெண்ணுக்கு எவ்வித உரிமையும்கிடையாது. ஆனல் சீதனமுறையிலே பெண்ணின் பெற்றோர்கள் கொடுக்கும் பணமோ ஆஸ்தியோ பெண்ணின் பெயரிலேயே சாதாரணமாக எழுதிவைக்கப்படுகிறது. மனைவியின் சம்மதமின்றி புருஷன் அதை எடுக்கவோ உபயோகிக்கவோ முடியாது. இவ்வகையில் வரதட்சணையைவிட சீதனமுறை சற்றே மேம்பட்டதே. என்றாலும் நடைமுறையில் இரண்டும், விவாகத்தை ஒரு வியாபாரம்போல் ஆக்கி பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பெருங் கவலை அளிப்பதாகும்.

மேலும் பெண்மையின் கௌரவத்தை, இந்த வழக்கம் உயர்த்துவதாக இல்லை. வரதட்சணையால் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் மிக அதிகம். சௌராஷ்டிரத்தில் இதுகாரணமாக ஒரு நாளைக்கு சராசரி ஒரு பெண் தற்கொலை செய்துகொள்கிறாளாம்! சீதனப்பிரச்சினையால் விவாகமாகாமல், பல தாய் தந்தையர்களுக்குப் பெருங் கவலையாக இருந்து வருவது பகிரங்க ரகசியம். ஒரு பெண் பிறந்ததுமே "பெண்ணு" என்று பல பெற்றோர்கள் கவலைப்படுவதற்கு, இதே சீதனப் பழக்கம்தான் பெரிதும் காரணமாகும். இந்த வழக்கம் நீங்கினல் இந்தியப் பிரதமர் நேருஜி கூறுவதுபோல், பெண்களுக்கு அது ஒரு பெரிய விடுதலையாவதுடன் பெற்றோர்களின் கவலையும் பெரிதும் தீரும்.

பெற்றோர்கள் இஷ்டப்பட்டு தங்கள் பெண்ணுக்கு விவாகப் பரிசு கொடுப்பதாயின் அதில் தவறில்லை. புதுக்குடும்பம் நடத்த முற்படும் பல இளம் தம்பதிகளுக்கும் அந்தப் பரிசுகள் பெரிய உதவியாகவுமிருக்கும். ஆனல் வரதட்சணையையும், சீதனத்தையும் ஒரு நிபந்தனையாகக்கேட்டு, மார்க்கெட் வியாபாரம்போல் "பேரம்" நடத்தி, விவாகத்துக்கு ஒழுங்குசெய்யும் வழக்கம்தான், சமூகச் சீர்கேடுகள் பலவற்றுக்குக் காரணமாகிறது. சீதனமாகப்பெற்ற பணத்தை இரண்டொருவருடங்களில் கரைத்துவிட்டு,

# "பெண் விடுதலைக்கு வரதட்சணை தடை அவசியம்"

## இந்திய பிரதமர் நேரு கருத்து

புதுடில்லி, மே. 6

"எமது பெண்களின் விடுதலைக்கு வரதட்சணைத் தடை மசோதா அவசியம்" என்று பாரதப்பிரதமர் திரு.நேரு கூறினர்.

வரதட்சணைத்தடைமசோதா இந்திய பார்லிமெண்டின் இரு சபைகளின் கலப்புக் கூட்டத்திலும் இப்பொழுது விவாதிக்கப்படுகிறது. இந்த விவாதத்தின் இடையில் தலையிட்டு பிரதமர் நேரு பேசினர்.

வரதட்சணைத் தடை மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு சோஷலிஸ சட்டத்தை நிறைவேற்றியதற்காக பார்லிமெண்ட் பெருமைப்படலாம் என்று திரு. நேரு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

சமூகத்தின் வேரூன்றிவிட்ட பழக்கவழக்கங்களைச் சட்டத்தின் மூலம் மட்டும் நீக்கிவிட முடியாது. வேறு வழிகளிலும் முயற்சி செய்ய வேண்டும். என்றாலும் அதை நீக்குவதற்குத் தூண்டுகோலாகவும் பாடமாகவும் இருப்பதற்கு சட்டம் அவசியம் முக்கியமாகும்.

மக்களின் அபிப்பிராயத்துக்கு உருவம்கொடுக்க சட்ட அங்கீகாரமும் இருக்கவேண்டும். எனவே மக்கள் ஒவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இப்பிரச்னைக்குச் சட்டம் அவசியம் என்று கருதுகிறேன்.

எமது பெண்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கும் என்ற முறையிலேயே இச்சட்டத்தை நான் கணிக்கிறேன்.

கடந்த காலத்திலும் சரித்திரத்திலும் எமது நாடு பெண்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருந்த போதிலும் சமூக பழக்கவழக்கங்களும் பெண்களுக்கு அதிகபளுவைச் சுமத்தி அவர்களுடைய வளர்ச்சியைத் தடைசெய்து வந்திருக்கிறது.

சமூகக் கட்டுப்பாடு காரணமாக இளம்பெண்கள் தற்கொலை செய்துகொள்வது பற்றிக் குறிப்பிடுகையில் திரு. நேரு பின்வருமாறு குறிப்பிட்டார்.

புள்ளி விபரக் கணக்கு என்ன சொல்கிறதென்று எனக்குத் தெரியாது. ஆனல் பலவருடங்களுக்கு முன் இந்து விதிகள் மசோதா விவாதத்தின்போது, சௌராஷ்டிர சமூகத்தில் ஒருநாளைக்கு ஒரு இளம் பெண் வீதம் தற்கொலை செய்துகொள்கிறார்களென்ற விபரம் தெரிவிக்கப்பட்டது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

தற்கொலைக்கு பல காரணங்கள் இருக்கக்கூடும். கல்வி,சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் இந்தியாவிலேயே முன்னேற்றமடைந்துள்ள குஜராத்திலேயே அந்த நிலையென்றது எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. நாட்டின் இதர பகுதிகளில் தற்கொலை விகிதாசாரம் எப்படியிருக்குமென்று ஆச்சரியமடைந்தேன். ஏனென்ருல் இவைகள் வெளிவருவதில்லை. தற்கொலை செய்துகொள்ளாமல் ஆனல் தற்கொலையைவிட மிகமோசமான கொடுமையைச் சகித்துக் கொண்டிருக்கும் பெண்கள் நிலைஎன்ன?

இதுபோன்றபழைய பழக்கவழக்கங்கள் நியாயமானவையென்று எவரும் கூறினல் சமுதாயம் முழுவதற்குமே அவர்கள் பெருந் தீங்கு செய்தவர்களாவார்கள். அந்த சமுதாய அடிப்படை முழுக்கத் தவருனது. அதை வேருடன் களையவேண்டும்.

சங்கடப்படும் தம்பதிகளும் பலருண்டு. அதுகாரணமாகப் பல அழகான குடும்பங்களும் குலைந்து விடுவதையும் பார்க்கின்ருேம். எப்படியும், இந்த வழக்கம் மறைவது குறித்து யாரும் வருந்தமுடியாது.

நீண்டகாலமாகவுள்ள இதுபோன்ற ஒருசமூக வழக்கத்தை சட்டமூலம் மாற்றிவிட முடியாதென்பதை நேருஜியும் ஒப்புக்கொள்கின்ருர். என்ருலும், பொதுமக்களுக்கு இவ்வழக்கத்திலுள்ள தீங்கை அறிவுறித்தி, அவர்களை இப்பிடிப்பிலிருந்து விடுதலை செய்யவும், இப்பிரச்சினையைத் தீர்க்க முதற்படியாகவும், இவ்வித சட்டம் அவசியமும் முக்கியமாகுமென்கிருர் நேருஜி. இவ்வித சட்டத்தைப் போல் இலங்கையிலும் சீக்கிரத்தில் நிறைவேற்றுவது இலங்கையிலுள்ள பெண்குலத்துக்கும் விடுதலை அளிப்பதாகும்.

## ரஷ்யா-பிரிட்டன் இணக்கம்

## மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தித் திட்டம்

கொழும்பு, மே 5

மீன்பிடித்தொழிலைஅபிவிருத்தி செய்வதற்காக, பலவகையான திட்டங்களை காணி அபிவிருத்தி மந்திரி திரு. சி. பி. டி. சில்வா உருவாக்கி, இதனை செயல்படுத்த ஒரு கமிட்டியையும் நியமித்துள்ளார்.

இயந்திரப்படகுகள் மூலம் மீன்பிடிப்பதுபற்றியும், கூட்டுறவு மீன்பிடிச்சங்கங்கள் இயங்குவதுபற்றியும், இந்தக்கமிட்டி ஆராய்ந்து இவைகளின் பலாபலன்களை எடுத்துக் கூறும் என்றும் தெரிகிறது.

மந்திரி சி. பி. டி. சில்வாவின் திட்டங்களின்படி, மீன்பிடியாளர்களுக்கு உதவிசெய்வதன் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்பிடிக்காரர்கள் தங்களுக்கு விரும்பிய படகுகளை, படகுத் துறையிலிருந்து வாடகைக்கு எடுத்துச் செல்லலாம் என்றும் தெரியவருகிறது.

## ரேஞ்சர்ஸ் வெற்றி

ரேஞ்சர்ஸ் கோஷ்டிக்கும் வதிரிபவுண்டேஷன் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் ரேஞ்சர்ஸ் கோஷ்டி 2-0புள்ளிகளால் வெற்றி பெற்றது.

ரேஞ்சர்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த திரு. ஏ. வெற்றிவேல், எம். ஆறுமுகம் ஆகியோரும் பவுண்டேஷன் கோஷ்டியைச் சேர்ந்த திரு. கே. தம்பித்துரையும் நன்ருக விளையாடினர்கள்.

## தேர்தல் நீதிபதிகள்

கொழும்பு, ஞாயிறு

இம்மாதம் 9ந்திகதி செவ்வாய்க்கிழமை ஜனப்பிரதிநிதிகள்சபை கூடும்பொழுது தேர்தல் நீதிபதிகள் நியமனம் சம்பந்தமான இலங்கை அரசியல் திட்ட திருத்த மசோதா விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்;

சர்ச்சைக்குரிய மசோதாவாக இது இல்லாத காரணத்தால் தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப்பெற்று இது நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறுபான்மைத் தமிழர் தலைவருக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, சனி

மேதினத்தையொட்டி சோவியத் யூனியன் சென்று திரும்பும் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கு உடுப்பிட்டித் தொகுதியில் மூன்று இடங்களில் வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளை உடுப்பிட்டிச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக் கிளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## வாக்காளர் பட்டியல்

## தேர்தல் கமிஷனரின் எச்சரிக்கை

கொழும்பு, ஞாயிறு

வாக்காளர் பட்டியலில் இலங்கையரின் பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று தேர்தல் கமிஷனர் திரு. பீலிக்ஸ் அபயசிங்கா வாக்காளர் பட்டியல் தயாரித்துவரும் உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியபாகிஸ்தானியபிரஜா பதிவுக் கமிஷன் வழங்கிய பத்திரத்துடன் குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரியின் தற்காலிக வாசகால பர்மிட் விசாவுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது என்று தேர்தல் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

என்னுடைய ஒரு பெரிய கவலை தீர்ந்தது. அமெரிக்க வானவெளி மனிதரான ஷெப்பர்ட், பத்திரமாக ராக்கெட்டில் 115 மைல் தூரம் வானவெளியில் சென்று 15 நிமிடம் கழித்துக் குறித்த இடத்தில் உயிருடன் வந்து சேர்ந்ததைக் கேட்டதும் "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டேன்.

முன் விளம்பரமெல்லாம் செய்தபின், அவருக்கு ஏதாவது ஏற்பட்டிருந்தால், அமெரிக்காவின் மதிப்பு என்ன ஆயிருக்கும். ஷெப்பர்ட் பத்திரமாக வானவெளிக்குச் சென்று திரும்பியதற்காக அவரையும், அமெரிக்காவையும் பாராட்டுகிறேன். அமெரிக்காவின் மதிப்பு இதனல் சற்றே உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின் குருஷேவ் கூட, ஜனதிபதி கென்னடிக்குத் தனது பாராட்டுதலை அனுப்பியுள்ளார்.

"வசிஷ்டர் வாக்காலே பிரம்மரிஷி" என்று ஒரு கதையுண்டு. அதுபோல் குருஷேவின் வாக்காலே பாராட்டுதல் கிடைத்துள்ளது பெரிய காரியமே.

என்ருலும் வானவெளியில் உலகத்தைச் சுற்ற வேண்டிய பெரிய காரியம் காத்திருக்கிறது. இனி அமெரிக்கா அதற்கான முயற்சியை விடாது செய்யுமென்றும், இவ்வாண்டுக்குள் அது வெற்றி பெறலாமென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

ரஷ்யாவை அமெரிக்கா முன்பின்னக வானவெளிப் போட்டியில் பிடித்துவிடலாம் ஆனல் இந்தப் போட்டி, உலகத்துக்கு நன்மை செய்வதாக இருக்குமென்றே நம்புவோம்.

* * *

இலங்கையிலிருந்து வானவெளியில் உலகம் சுற்றத் தகுந்தவரொருவர் இருப்பதாக நண்பரொருவர் தெரிவித்தார். எனக்கு விஷயம் புரியவில்லை.

பின்னர் அவரே அதை விளக்கினர். உலகத்தை வானவெளியில் சுற்றிய ரஷ்ய ககாரினுக்கு இரண்டு புதல்விகள். அதே போல் வானவெளிக்குச் சென்ற அமெரிக்க ஷெப்பர்ட்டுக்கும் இரண்டே புதல்விகளாம்.

ஆகவே யாருக்கு இரண்டு புதல்விகளுள்ளரோ அவர்களே வானவெளி யாத்திரைக்குச் செல்லத் தகுதியானவரென்றும், யாழ்ப்பாணத்தில் அவ்விதம் தகுதி வாய்ந்தவரொருவர் இருப்பதாயும் அவர் சொன்னதும் இருவரும் சேர்ந்து சிரித்துவிட்டோம்!

உங்களுக்கு எத்தனை பெண் குழந்தைகள்?

* * *

அன்று லண்டனிலே புதுவித "தோணி விமானம்" செய்வதில் ஈடுபட்ட இலங்கை திரு ஞானசம்பந்தனைப் பற்றிக் கேட்டிருந்தேனல்லவா? அதைப் படித்ததும் ஓர் அன்பர் அவருடைய படத்துடனே வந்து விவரம் தெரிவித்தார்." ஞானசம்பந்தன் வட்டுக்கோட்டை மூளாய் ரோட்டைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றவர். லண்டன் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் தேறினர். அவர் தகப்பனர் முத்தையா மலாயாவிலே ஈப்போவில் ஆடிட் ஆபீஸில் வேலை பார்த்தவர். லண்டனில் விமான இஞ்சினீயராக ஐந்து வருட பயிற்சி பெற்று வருகிருர்" என்று மராமத்து ஓவர்ஸியர் திரு. ஸி. நவரத்தினம் தெரிவித்தார்.

இதே தகவலை வட்டுக்கோட்டை ஆசிரியர் க. அருணசலம் அவர்களும் கடிதமூலம் தெரிவித்துள்ளார். இருவருக்கும் எனது "தாங்ஸ்". சபாஷ் வட்டுக்கோட்டை!

# அமெரிக்காவுக்கு குருஷேவ் பாராட்டு

வாஷிங்டன், மே 7

மனிதனை வானவெளிக்கு அனுப்பி வெற்றிகரமாக மீட்ட சாதனையைப் பாராட்டி அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடிக்கு சோவியத் பிரதமர் குருஷேவ் ஒரு செய்தியை அனுப்பினர்.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன், பிரஞ்சு ஜனதிபதி டிகால், ஜப்பான் பிரதமர் ஆகியோரும் அமெரிக்காவின் சாதனையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பினர்.

பல்வேறு நாடுகளின் பத்திரிகைகளும் அமெரிக்காவின் வானவெளிப் பிரயாண சாதனையைப் பாராட்டி எழுதியிருந்தன. வானவெளி ஆராய்ச்சிகளைதையும் ரஷ்யாவைப் போல் அமெரிக்கா பரம இரகசியமாக வைத்துக்கொள்ளாததை பல பத்திரிகைகள் பாராட்டின.

வானவெளிக்குச் சென்று திரும்பிய அலன் ஷெப்பர்ட் நல்ல ஆரோக்கியத்துடனிருப்பதாக டாக்டர்களின் பரிசோதனைக்குப்பின் அறிவிக்கப்பட்டது.

"வானவெளிப் பிரயாணம் அதிகதூரமில்லாததுதான்எனக்குக் கவலையாக இருக்கின்றது" என்று திரு. ஷெப்பர்ட் கூறினர்.

அலன் ஷெப்பர்டுக்கு நாளை திங்கட்கிழமை அமெரிக்க ஜனதிபதியின் வெள்ளை மாளிகையில் ஜனதிபதி கென்னடி விசேஷ விருந்து வழங்குவார்.

வானவெளி ஆராய்ச்சித் திட்டத்துக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று ஜனதிபதி கென்னடி அமெரிக்க காங்கிரஸிடம் விரைவில் கோருவார்.

வானவெளிப் பிரயாணம் மூலம் கிடைக்கும் தகவல்கள் உலக விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்படும் என்று ஜனதிபதி கென்னடி தெரிவித்தார்.

# கட்டுப்பாட்டுக் கமிஷன்

## லாவோஸ் சென்றது

புதுடில்லி, மே 7

லாவோசுக்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷன் இன்று நண்பகலுக்கு சற்று முன்னதாக புதுடில்லியிலிருந்து சைகோனுக்குப் புறப்பட்டுச் சென்றது.

இந்தியாவைத் தலைமையாகக் கொண்ட இக் கமிஷனில் போலாந்தும் கனடாவும் அங்கம் வகிக்கின்றன.

இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்ட முதல் கோஷ்டியில் கமிஷனின் தலைவர் திரு.சென் உட்பட மற்றும் அங்கத்தவர்களும் சென்றனர். இந்திய சுப்பர் கொன்ஸ்டலேசன் விமானத்தில் இவர்கள் சென்றனர்.

இந்த விமானம் கல்கத்தாவுக்குச் சென்று அங்கிருந்து இராணுவ அதிகாரிகள் ஏழு பேரை அழைத்துச் சென்றது.

இந்த விமானம் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தின்பின் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒழுங்கு செய்திருந்த ஒரு விமானத்தில் எழுபது பேர்கொண்ட கோஷ்டியொன்று புதுடில்லியை விட்டுப் புறப்பட்டது. இந்த விமானம் நேராக சைகோனுக்குப் போய்ச் சேரும். மற்றும் 75 பேர் கொண்ட கோஷ்டியொன்று விரைவில் புறப்பட்டுச் செல்லவிருக்கிறது.

லாவோசில் சண்டை நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது. என்ருலும் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது சம்பந்தமாக நேற்று பதட்லாவோஸ் பிரதிநிதிகள் பூன்ஓம் அரசாங்கப் பிரதிநிதிகள், இளவரசர்சுவன்னபூமா அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட மகாநாட்டில் அபிப்பிராயபே[illegible]ம்ஏற்பட்டதாகவும் இதனுல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

லாவோசில் சண்டை நிறுத்தப்படவும் அடுத்து அங்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்காக லாவோஸ் கட்டுப்பாட்டுக் கமிஷன் இப்பொழுது லாவோசுக்குச் செல்கிறது.

### சுகாதார இலாகா எச்சரிக்கை

கொழும்பு, ஞாயிறு

சுகதேகிகளான அரசாங்க ஊழியருக்குச் சுகயீனம் என்று வைத்தியப் பத்திரம் வழங்கினல், இப் பத்திரத்துக்கு இரண்டு டாக்டர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்ற புதிய திட்டம் கொண்டுவரப்படுமென்று சுகாதார இலாகா, டாக்டர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகமாக இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சுகயீனம் என்று வைத்தியப் பத்திரம் வழங்கியுள்ள சம்பவங்கள் பலவுண்டு என்று சுகாதார இலாகா, டாக்டர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்விதம் வைத்திய பத்திரம் வழங்குவது குற்றமென்று இது நிரூபிக்கப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சுகாதார இலாகா டாக்டர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

### தங்கப் பதக்கம்

உடுப்பிட்டி, ஞாயிறு

விவேகானந்த சபையாரால் நடத்தப்பட்ட சைவசமயப் பாடப் பரீட்சையில் முதலாவதாகச் சித்தியடைந்த தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் திரு எஸ். தங்கராஜாவுக்கு சபையாரால் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

### நியூஜெர்ஸி கல்விமான்கள் மகாநாடு

நியூஜெர்ஸி, மே 7

இங்குள்ள பதினெரு உயர்தரக் கல்வி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக் கழகங்களில் ஆசிய கல்வியை எத்துறையில் விருத்தி செய்யலாமென்பதை ஆராய்ந்து வருகின்றனர்.

நூட்கேர்ஸ் பல்கலைக் கழகத்தின் ஆசிய கல்விச் செயற்குழு இந்த "நியூஜெர்ஸி ஆசிய கல்வி மகாநாட்டை" ஒழுங்கு செய்துள்ளது. இம் மகாநாட்டின் கூட்டங்கள் மூன்று வாரத்திற்கு ஒரு முறை நடைபெறுகின்றன. அங்கு முன் கூட்டியே தயாரித்த நிகழ்ச்சிநிரல் பிரகாரம் ஆசிய கல்வி அமைப்பு முறையுடன் தொடர்புடைய பலவிஷயங்கள் ஆராயப்படுகின்றன.

### இம்முறை பரீட்சையில்லை

உடுப்பிட்டி, வெள்ளி

மே மாதம் 2-ம் திகதி நடைபெறவிருக்கும்ஆசிரியர் ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை போதிய பரீட்சார்த்திகள் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் வைக்கமுடியாதென்றும், விண்ணப்பம் அனுப்பிய பரீட்சார்த்திகள் அனுரதபுரத்துக்குச் சென்று பரீட்சை எழுதுமாறும் பரீட்சைக் கமிஷனர் பரீட்சார்த்திகளுக்கு அறிவித்துள்ளார்.

# ஆசிரியர்களின் இடமாற்றம்

## ஆசிரியர் சங்கக்காரியதரிசி குற்றச்சாட்டு

கொழும்பு, ஞாயிறு

'தேர்தலில் தோல்வி அடைந்த அபேட்சகர்களும், அரசியல் வாதிகளும் சமர்ப்பிக்கும் பெயர்ப்பட்டியலைக் கொண்டு வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கல்வி இலாகாவினல் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்'.

அகில இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ஜே. டி. ஆசீர்வாதம் கல்வி மந்திரியைச் சந்திக்கும் பொழுது மேற்கண்டவாறு தெரிவிப்பார்.

ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் அரசியல் தலையீட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போவதாக மந்திரி முன்பு கொடுத்த வாக்குறுதியைத் தாம் நினைவூட்டப்போவதாகவும் திரு. ஆசீர்வாதம் தெரிவித்தார்.

தேர்தலில் தோல்வியடைந்த சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஒருவர் இடமாற்றம் செய்யப்படவேண்டிய ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை சென்றவாரம் கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்ததாக திரு. ஆசீர்வாதம் கூறினர்.

ஆசிரியர் சங்கத் தூது கோஷ்டி அடுத்தவாரம் கல்வி மந்திரியைச் சந்திக்கவிருக்கிறது.

### வடக்கு, கிழக்கு தந்தித் தொடர்பு

**இன்று மீண்டும் ஆரம்பம்**

கொழும்பு, ஞாயிறு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தந்தித்தொடர்புகள் மீண்டும் வழமைபோல் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லையென்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 2124 துப்பாக்கிகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கை கூறியது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டாமென்று பிள்ளைகளைக் கேட்டுக்கொள்ளும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்த பத்துப்பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரென்றும், இவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

# இலட்சுமித்தோட்ட துப்பாக்கிப் பிரயோகம்

## விசாரணைக் கமிஷன் நியமனம்

கொழும்பு, ஞாயிறு

நாவலப்பிட்டி இலட்சுமித் தோட்ட விவகாரம் சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் ஒன்றை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. கொன்ராட் பெரேராவை விசாரணைக் கமிஷனராக நியமித்துள்ள பிரதமர் அவருக்கு உதவி புரிவதற்காக முடிக்குரிய வழக்கறிஞர் திரு. விஜயசிங்காவை நியமித்துள்ளார். கமிஷன் காரியதரிசியாக ஒரு சிவில் அதிகாரி நியமிக்கப்படுவார்.

1959-ம் ஆண்டு தொடக்கம் இலட்சுமித் தோட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள இக்கமிஷன் இனி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பற்றியும் தனது அறிக்கையில் சிபார்சு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

நாவலப்பிட்டி இலட்சுமித் தோட்டத்தில் இரண்டு மூன்று தடவை நடைபெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் தொழிலாளர் சிலர் கொல்லப்பட்டதும் இது பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கிளர்ச்சி நடத்தி வந்தது.


**உங்கள் நோய்**

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.



**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கன்னதிட்டி வீதியில் 34-ம் இலக்க வளவு, வீட்டுடன் விற்பனைக்கிருக்கிறது.

விபரங்கட்கு:
க. ஐயாத்துரை
45, கச்சேரி நல்லூர் வீதி,
(சுண்டிக்குளி)
யாழ்ப்பாணம்.



அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.

Leyden
L.I.L

**இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!**

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



எப்பொழுதும் உபயோகியுங்கள்

**டால்மியாஸ்**

★ போட்லந்து சிமெந்து
★ ஸ்டோன்வெயர் குழாய்கள்
★ பயர் பிறிக்ஸ்

**செட்டிநாட்**
**கார்ப்பரேஷன்(பிரைவேட்)லிமிட்டெட்**
116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.

## இளம் பெண்ணுக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஞானவதி என்ற 16 வயதுள்ள அழகிய இளம் பெண் ஒருவர் தனது உடலில் மண்ணெண்ணையை ஊற்றித் தீப்பற்ற வைத்ததினால் உடலின் பெரும் பகுதி தீப்புண்பட்டு பரிதாபகரமான நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பொழுது இவர் சிறிது குணமடைந்து வருகிறார்.

யாழ்ப்பாணம் புளியடி ஒழுங்கையில் வசிக்கும் பேபி நோனாவின் மகளான ஞானவதி தமது தயாருடன் ஏற்பட்ட கோபங்காரணமாகவே தற்கொலை செய்ய முயன்றதாகவும் பெற்றோரைப் பயமுறுத்தியதாகவும் அதன் விளைவே இது வென்றும் தெரிய வருகிறது.

ஞானவதியின் உடை முழுக்கத் தீப்பற்றி எரிந்திருப்பதுடன் அவரின் உடலின் முற்பக்கம் முழுமையும் பெருத்த தீக்காயத்துக்குட்ப்பட்டிருப்பதாகவும் காணப்பட்டது.

ஜேர்மன் பார்லிமெண்டில்:

## 48 பெண் அங்கத்தினர்

### மூதாட்டி ஒருவர் விவாதத்தில் நிபுணர்

வரப்போகும் பொதுத் தேர்தலில் ஏராளமான பெண் அங்கத்தினர் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கபபடவேண்டுமென அகில இந்திய தேசிய காங்கிரஸ் விரும்புகின்றது. இப்போதுள்ள சென்னை சட்டசபையில் 12 பெண் அங்கத்தினர் உளர். ஜேர்மன் பார்லிமெண்டில் 48 பெண் அங்கத்தினர் உளர். அவர்களில் ஒருவர் 82 வயதுள்ள மூதாட்டி. இவர் விவாதத்தில் நிபுணர் எனத் தெரிகின்றது. மேற்கு ஜேர்மனியின் அரசியல் வாழ்க்கையில் யுத்தத்திற்குப் பிறகு ஏராளமான பெண்மணிகள் முன்னணியிலிருந்து வருகின்றனர்.

"பண்டெஸ்டெக்" எனப்படும் மேற்கு ஜேர்மன் பார்லிமெண்டில் இப்போது 48 பெண் அங்கத்தினர் இருந்து வருகின்றனர். இவர்களில் 24 பேர் அடினுர் கட்சியான கிறிஸ்த ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள். 21 பேர் சோஷலிஸ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள். மூவர் சுதந்திர ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

14 பெண் அங்கத்தினர் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். 16 பேர் நிர்வாகத்துறை சட்டத் துறையைச்சேர்ந்தவர்கள். 12 பேர் சமூகச் சேவையாளர்கள்.

பெண் அங்கத்தினர் பாதிப் பேருக்கு மேல் 50 வயதைத் தாண்டியவர்கள். மிகக் குறைந்த வயதுள்ளவர் 36 வயதுள்ள ஒரு சீமாட்டி. மிக அதிக வயதுள்ளவர் 82 வயதுள்ள ஒரு மூதாட்டி. இவர் நீண்டகாலமாகவே எம். பி ஆக இருப்பதுடன் விவாதிப்பதிலும் வல்லவராம்.

மேற்கு ஜேர்மன் வரவு செலவுத் திட்டம் உணவு சம்பந்தப்பட்ட சட்டங்கள் வீடு வசதித் திட்டம், ஜேர்மனியின் பிரச்சினைகள், அகதிப் பிரச்சினை இவ்விஷயங்கள் பற்றிஎல்லாம் அவர்கள் அக்கறைகாட்டி விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் வாக்காளர்களின் பூரணமான நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றனர். 48 பேரில் 20 பேர் 1949 முதற்கொண்டே தொடர்ந்து எம். பி. க்களாகச் சேவை செய்து வருகின்றனர். 15 பேர் 1953 முதல் சேவை செய்து வருகின்றனர். 1961 தேர்தலிலும் பெண் அங்கத்தினர்கள் அதிகம் பேர் பார்லிமென்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




பற்றறிகள்

சார்ச் செய்தும்

பழுது பார்த்தும்

உத்தரவாதத்துடன்

கொடுக்கப்படும்

முருகன் எலக்றிகல் ஸ்ரோர்ஸ்

6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## நோய் காரணமாக தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையாவின் மனைவி மாணிக்கம் என்பவர் கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார். இச் சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது.

இறந்தவர் கடந்த சில காலமாகத் தமது அல்கில் புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்தாரென்றும் அந்நோய் கடந்த சில நாட்களாக அவருக்கு அதிக வேதனையை அளித்து வந்ததாகவும் அதனால் அவர் தான் இறக்கப்போவதாகத் தமது கணவரிடம் சில நாட்களாகச் சொல்லிவந்ததாகவும், முதல்நாள் இரவு படுக்கையிலிருந்த அவரைக்காணுது தேடிய போது கிணற்றுக்குள் கிடக்கக் காணப்பட்டாரெனவும் இறந்தவரின் கணவரான திரு. வல்லிபுரம் கந்தையா சாட்சியமளிக்கும் போது கூறினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.


யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!

உங்கள் காப்பியின் தரம்,
குணம், மணம்
எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில்
தருவித்துள்ள நவீன

எலக்ரிக் ரேஸ்டர்

மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும்
உங்களுக்குத் தேவையான காப்பியை
வறுத்து அரைத்து 15 நிமிஷ நேரத்தில்
குணம், மணம் நிறைந்த காப்பித்தூளைத்
தருகிறோம்.

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது.

முகம்மது அலி அப்துல் அலி

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம.

போன்: 515


## ராதகிருஷ்ணன் பிறந்த வீடு நன்கொடையாக வழங்கப்பட்டது

சென்னை, மே 7

இந்தியஉபஜனதிபதிடாக்டர் ராதாகிருஷ்ணன், தமிழ் நாட்டிலுள்ள திருத்தணியில் தாம் பிறந்த வீட்டை பொதுக்காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு நன்கொடையளித்து விட்டார். அத்துடன் மேலும் 10,000 ரூபாயையும் அவர் நன்கொடையாக அளித்தார். திருத்தணியிலுள்ள சுப்ரமண்ய சுவாமி தேவஸ்தானம் இவ்விஷயத்தை பொறுப்பேற்று அதை பொது நூல்நிலையமாக்க ஏற்பாடு செய்துள்ளது.

# பண்டித மோதிலால் நேருவின் சேவைக்கு தலைவர்கள் பாராட்டு

## ராஷ்டிரபதி பவன் விழாவில் நினைவு நூல்கள், ஸ்டாம்பு வழங்கப்பட்டன

புதுடில்லி மே 7

பண்டித மோதிலால் நேரு வாழ்க்கையைப் பற்றிய இரு புத்தகங்களை ராஷ்டிரபதி பவனில் நடந்த மோதிலால் நேரு 100-வது பிறந்ததின விழாவில் உப ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் ராஷ்டிரபதி ராஜேந்திரப்பிரசாத்திடம் வழங்கினர்.

இதே விழாவில் மோதிலால் நேரு நூற்றுண்டு விழா நினைவு ஸ்டாம்புகள் கொண்ட அழகிய ஆல்பம் ஒன்றை யூனியன் செய்திப் போக்குவரத்து மந்திரி டாக்டர் சுப்பராயன் ராஷ்டிரபதியிடம் வழங்கினர்.

திரு. பி. ஆர். நந்தா எழுதியுள்ள பண்டித மோதிலால் நேரு வாழ்க்கை வரலாற்றின் 400 பக்கங்கள் கொண்ட கையெழுத்துப் பிரதியும் ராஷ்டிரபதிக்கு சம்பிரதாய பூர்வமாக வழங்கப்பட்டது.

புத்தகங்களையும், ஸ்டாம்பு ஆல்பத்தையும் ஏற்றுக்கொண்டு ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் பேசுகையில் பண்டித மோதிலால் நேருவும், இதரர்களும் புரிந்த தன்னலமற்ற தியாகமே தேசவிடுதலைக்கு வழிவகுத்தது என்று சொன்னர். அம்மாபெருந் தலைவர்களுக்கு நாம் சிறந்த முறையில் செலுத்தும் நன்றிக்கடன் தேசத்தை அபிவிருத்தி செய்து சுதந்திரத்தை அர்த்த புஷ்டியுள்ள தாக்குவதற்காக அவர்களது வழியைப் பின்பற்றி கடுமையாக உழைப்பதுதான் என்று ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

புத்தகங்களை வழங்கி உப-ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் பேசுகையில், மோதிலால் நேருவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

### பார்லிமெண்டில் பாராட்டு

வரதட்சணைத் தடை மசோதாவை விவாதிக்க பார்லிமெண்டின் இரு சபைகளும் இன்று கூடியபோது சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார் பண்டித மோதிலால் நேருவைப் பற்றிப் பாராட்டி பேசினர். நமது நாட்டின் தவப்புதல்வர் மோதிலால் நேரு என்று குறிப்பிட்டார்.

பண்டித மோதிலால் நேருவின் பார்லிமெண்ட் வாதத் திறமையை எடுத்துக் காட்டி அவரைப் பின்பற்றி உலகில் மிகச் சிறந்த பார்லிமெண்டில் ஒன்ருகவாவது இதனை விளங்கச் செய்யுமாறு அவர் மெம்பர்களைக் கேட்டுக்கொண்டார்.

பண்டித மோதிலால் நேருவையும், அவரது ஒப்பற்ற புதல்வரான பிரதம மந்திரி நேருவையும் சபாநாயகர் குறிப்பிடத் துவங்கியதும் மெம்பர்கள் நீண்ட கரகோஷம் செய்தனர்.

ஜாலியன் வாலாபாக் படுகொலையால் உணர்ச்சி மேலிட்டு, மோதிலால் நேரு புரட்சிவாதியாக மாறிவிட்டாரென்றும் மகாத்மா காந்தியின் பிரதம சீடர்களில் ஒருவரானதாகவும், ஸ்வராஜ்யக் கட்சியின் தலைவராகப் பார்லிமென்டில் எதிர்க் கட்சியில் திறமையுடன் செயலாற்றினர் என்றும் சபாநாயகர் கூறினர், உணர்ச்சியிலும், உருவத்திலும் கம்பீரம் மிகுந்தவர் என்றார். அவரது ஆத்மா சபை நடவடிக்கைகளுக்கு வழி காட்டட்டும் என்று சபாநாயகர் பிரார்த்தித்தார்.

காலஞ் சென்ற பண்டித மோதிலால் நேருவின் முழு அளவு உருவப்படம் தீபாலங்காரத்துடன் பார்லிமெண்டில் மத்திய மண்டபத்தில் காட்சியளித்தது.

பண்டித மோதிலால் நேரு தேசத்துக்கு அளித்துள்ள மகத்தான பரிசு ஜாவஹர்லால் நேருதான் என்று திரு. தாண்டன் கூறினர்.

### ரூபா 15000 ஸ்டாம்புகள் விற்பனை

மோதிலால் நேரு ஞாபகார்த்த ஸ்டாம்புகள் பம்பாயில் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டதாக அங்கிருந்து வந்துள்ள தகவல்கள் கூறுகின்றன. ரூபாய்15,000 மதிப்புள்ள தபாற்தலைகள் விற்பனையானதாக பம்பாய் ஜெனரல் போஸ்ட் ஆபீஸ் குறிப்பிடுகின்றது.

## பருத்தித்துறைப் பல நோக்குச் சங்கம்

### புதுவருட உத்தியோகத்தர் தெரிவு

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறைப் பல நோக்குச் சங்க வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு. எஸ். ரி. சாமுவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மீண்டும் புதுவருடத்துக்கு திரு. எஸ். டி. சாமுவேல் தலைவராகவும், திரு. வி. வைரமுத்து செயலாளராகவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

யூனியன் பிரதிநிதியாக திருவாளர் இ. [illegible]கேசன் தெரிவு செய்யப்பட்டார்.

## குற்றத்தடுப்பு இயக்கம்

கொழும்பு, மே 7

சகல சமயத் தலைவர்களின் ஒத்துழைப்போடு குற்றத் தடுப்பு இயக்கமொன்றை இம் மாதம் 21-ந் திகதியிலிருந்து 28-ம் திகதி வரை நடாத்த பௌத்த ஆலோசனைச் சபையார் முயற்சி எடுத்துள்ளார்கள்.

கொழும்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தோடு இவ்வியக்கம் ஆரம்பமாகும். இதற்கு சகல சமயத் தலைவர்களும் அழைக்கப்படுவரெனத் தெரிகிறது.

## "பாரத அரசியல் சாசனத்தின் தந்தை"

### மோதிலால் நேருவுக்கு ராஜாஜி அஞ்சலி

சென்னை, மே 7

சென்னையில் நடைபெற்ற மோதிலால்நேரு ஞாபகார்த்த வைபவம் ஒன்றில் சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி பேசுகையில் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துவிளக்கிக் கூறிவிட்டு, "மோதிலால் நேரு பாரத அரசியல் சாசனத்தின் தந்தை" என்று குறிப்பிட்டார்.

## டில்லியில் செக் மந்திரி

புதுடில்லி' மே 7

செக்கோஸ்லோவேகிய துணை வெளிநாட்டு மந்திரி இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். அவர் திரு. நேருவுடன் பேச்சு நடத்துவார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

№ 09085